**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**முன்னிலை - செல்வி.சே.தா.ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ம் நாள் புதன் கிழமை

அசல் வழக்கு எண்.206/2012

**OST/0300206/2012**

சக்கரபாணி பிள்ளை ... வாதி

/எதிர்/

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
   திருவண்ணாமலை மாவட்டம்,
   திருவண்ணாமலை.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்,
   வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   செய்யாறு.
3. ஊராட்சி மன்றத்தலைவர் அவர்கள்,
   பாப்பாந்தாங்கல் கிராமம்,
   செய்யாறு தாலுக்கா. தி.மா
4. பிரேமா.
5. ராஜ்குமார். .. பிரதிவாதிகள்

இவ்வழக்கு என்முன்பாக 06.03.2024 தேதியன்று விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.எம்.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 4,5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், வாதியை அழைத்து ஆஜரியின்மையால், இதுகுறித்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்து பாப்பாந்தாங்கல் புதூர் சாலையில் தாவா சொத்திலிருந்து உபரிநீர் வெளியேறுவதற்கு ஏதுவாக சாலையின் குறுக்கே பூமிக்கடியில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த பைப்லைன் அப்புறப்படுத்திவிட்டதால் மீண்டும் பைப்லைனை புதைத்துக்கொடுக்க 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒரு செயல் உறுத்துக்கட்டளை பிறப்பிக்க உத்திரவிட வேண்டுமாறும், வாதிக்கு ஏற்பட்ட செலவு தொகையினை பிரதிவாதிகள் கட்டிக் கொடுக்க உத்திரவிட வேண்டுமாறும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதியின் தரப்பில் வழக்கறிஞரை தவறாமல் நியமிப்பதற்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதி ஆஜர். வாதியின் மனைவியான ஒரு திருமதி. காசியம்மாள் ஆஜர். இன்று வக்காலத்து தாக்கல் செய்வதற்காகவே அல்லது மேல் உத்தரவிற்காக வழக்கு வாய்தா வைக்கப்பட்டுள்ளது. வக்காலத்து தாக்கல் செய்ய வழக்கு நிலுவையில் எடுத்து வைக்கப்பட்டது. உணவு இடைவேளைக்கு பின்னர் வழக்கு 3.00 மணிக்கு அழைக்கப்பட்டபோது வாதி தரப்பில் ஆஜரில்லை. வக்காலத்து தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு ஆவணங்களை ஆராய்ததில் 30.01.2024 முதல் வாதி தரப்பில் வழக்கறிஞரை நியமிப்பதற்காக அவகாசம் அளிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. வாதி தரப்பில் நடவடிக்கை எடுப்பதற்கு போதிய அவகாசம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினத்திலும் வழக்கறிஞரை நியமித்து வக்காலத்து தாக்கல் செய்ய மாலை 3.00 மணிவரை வழக்கு நிலுவையில் வைக்கப்பட்டிருந்தும் வாதி தரப்பில் எந்தவித நடவடிக்ககையும் எடுக்கவில்லை. 2012ம் வருடம் முதல் நிலுவையிலுள்ள இந்த வழக்கை மேற்கொண்டு நடத்துவதற்கு வாதி தரப்பில் எந்த நடவடிக்கயையும் எடுக்காதது வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லாததை காட்டுகிறது. எனவே வாதியின் இவ்வழக்கானது செய்யத்தக்க செய்யாமைக்காக செலவுதொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) சே.தா.ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.